
வினைமுற்று


வினைச்சொல்

படித்தான் சென்ற

ஆடுகின்றாள் கண்டு

பறந்தது - **செயல்கள்**


செயல் - வினை


செயல்கள் ⇨ வினைச்சொற்கள்
படித்தான்
சென்ற
ஆடுகின்றான்
கண்டு
பறந்தது



படித்தான்
ஆடுகின்றான்
பறந்தது
முற்றுவினை
அல்லது
வினைமுற்று


சென்ற
கண்டு
எச்சம்
அல்லது
எச்சவினை


ஐந்து பால்களாகிய
ஆண்பால், பெண்பால்,
பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
ஆகியவற்றையும்


பொருள் முற்றுப்பெற்ற வினைச்சொல்
வினைமுற்று


பொருள் முற்றுப்பெறாத வினைச்சொல்
எச்சம்

# ஐந்து பால் (ஐம்பால்)

வந்தான் - ஆண்பால்
வந்தாள் - பெண்பால்
வந்தனர் - பலர்பால்
வந்தது - ஒன்றன்பால்
வந்தன - பலவின்பால்


மூன்று காலங்கள்
படித்தான் - இறந்தகாலம்
படிக்கின்றான் - நிகழ்காலம்
படிப்பான் - எதிர்காலம்


# மூன்று இடங்கள்

வந்தேன் - தன்மை

வந்தாய் - முன்னிலை

வருவான் - படர்க்கை


வினைமுற்று
தெரிநிலை வினைமுற்று
குறிப்பு வினைமுற்று


தெரிநிலை வினைமுற்று
செய்பவர்
செயல்
கருவி
காலம்
நிலம்
செய்பொருள்
ஆகிய ஆறனையும் வெளிப்படையாக உணர்த்தும்


எ.டு - எழுதினாள்
செய்பவர் - மாணவி
கருவி - தாளும் எழுதுகோலும்
நிலம் - பள்ளி
காலம் - இறந்தகாலம்
செய்பொருள் - கட்டுரை
செயல் - எழுதுதல்


குறிப்பு வினைமுற்று
பொருள், இடம், காலம்
சினை, குணம், தொழில்
ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு
காலத்தை வெளிப்படையாகக் காட்டாது
செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும்

# குறிப்பு வினைமுற்று

எ.டு

| | | |
|---|---|---|
| பொருள் | - | பொன்னன் |
| இடம் | - | தென்னாட்டார் |
| காலம் | - | ஆதிரையான் |
| சினை | - | கண்ணன் |
| பண்பு (குணம்) | - | கரியன் |
| தொழில் | - | எழுத்தன் |


பிறவகை வினைமுற்றுகள்
ஏவல் வினைமுற்று
வியங்கோள் வினைமுற்று


ஏவல் வினைமுற்று
தன் முன் உள்ள ஒருவரை
ஒரு
செயலைச் செய்யுமாறு ஏவுதல்


ஏவல் வினைமுற்று
எ.டு:
பாடம் படி
கடைக்குப் போ

ஏவல் வினைமுற்று

ஒருமை, பன்மை

ஆகிய இரு வகைகளில் வரும்

எழுது - ஒருமை

எழுதுமின் (எழுதுங்கள்) - பன்மை


வியங்கோள் வினைமுற்று

# வியங்கோள் வினைமுற்று

வாழ்த்துதல், வைதல்,

விதித்தல், வேண்டல்

ஆகிய பொருள்களில் வரும்


வினை முற்றுகள்
இரு திணைகளாகிய
உயர்திணை, அஃறிணை
ஆகியவற்றையும்


ஐந்து பால்களாகிய
ஆண்பால், பெண்பால்,
பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
ஆகியவற்றையும்

மூன்று இடங்களாகிய

தன்மை, முன்னிலை, படர்க்கை

ஆகிவற்றையும்

உணர்த்துவனவாக அமைகின்றன.


வியங்கோள் வினைமுற்றின்
விகுதிகள்
க, இய, இயர் , அல்


வியங்கோள் வினைமுற்று
(எ.டு)
வாழ்க, ஒழிக, வாழியர்.

## ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள்

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும் | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் |
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு<br>கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும் | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை<br>வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும் |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும் | விகுதி பெற்றே வரும் |

sns academy
a fingerprint school

sns INSTITUTIONS

